29–08–2025.
O.S.No. 278/2022

வா. சா. 1 பக்கிரிசாமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் விவசாயம் செய்கிறேன். மேலும் கோழி விற்பனை செய்து வருகிறேன். 5, 6 கறிக்கடை வைத்துள்ளேன். என்னுடைய பெயரில் வங்கிக்கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. கனரா வங்கி, எஸ்பிஐ வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. இரண்டு வங்கிகளில் மட்டும்தான் கணக்குள்ளதா என்றால் ஐசிஐ வங்கியில் கணக்கு இருந்தது. அதை முடித்துவிட்டேன். கனரா வங்கி கணக்கு எண்.1999. எஸ்பிஐ வங்கி கணக்கு எண் ஞாபகமில்லை. 18.07.2019 ம் தேதிக்கு முன்பு நான் பெட்ரோல் பங்க் வைத்து நடத்தினேனா என்றால் இல்லை. மேற்படி தேதிக்கு பின்னர்தான் பெட்ரோல் பங்க் நடத்திவந்தேன். ஒரு பெட்ரோல் பங்க் நடத்தவேண்டுமென்றால் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனில் டீலராக இருக்கவேண்டும் என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதி டீலராக இருந்துவருவதால் மீண்டும் நான் டீலராக இருக்கமுடியாது என்றும் நமக்குள் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு வரக்கூடிய லாபத்தில் பாதி பாதி எடுத்துக்கொள்ளலாம் என சொல்லி ஒப்பந்தம் போடப்பட்டது. தாவா பெட்ரோல் பங்க் பிரதிவாதிக்கு எப்படி வந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் எஸ்.சி.கோட்டாவில் கிடைத்தது. எஸ்.சி. கோட்டாவில் கிடைத்ததை அவர்கள்தான் நிர்வாகம் செய்யவேண்டும் என்றால் அப்படியல்ல. ஏற்கனவே அந்த பெட்ரோல் பங்கை 2,3 பேர்கள் நடத்தி வந்தார்கள். எனக்கு பிறகு இரண்டு பேருக்கு கொடுத்துவிட்டார்கள்.

வழக்குரைஞரின் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.08.29 16:04:09 +0530

Principal District Judge,
Dindigul.